CC// 58/2020

PW 1

சந்திரசேகர்

Date 01.11.2022

முதல் விசாரணை தொடர்ச்சி

2ம் எதிரியின் காசோலையை 1ம் எதிரி என்னிடம் கொடுத்தார் அந்த காசோலை ரூ1,20,000 க்கு கொடுத்தார். அந்த காசோலை அசல் அ.சா.ஆ. 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. அந்த காசோலை திரும்பியதற்கான memo அ.சா.ஆ. 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குவி

எதிரிகளுக்கு எதிராக புகார் மனுவை நான் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். அது தவிர வேறு எந்த புகாரும் எதிரிகளுக்கு எதிராக நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ExP 1 புகாரில் 2 வது பக்கத்தில் ரூ 1,20,000 என்பதும் KV bank cheque என்று இரண்டு காசோலை எண்களையும் இரண்டு வரிகளுக்கு இடையில் இடை செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இடை செருகலாக எழுதப்பட்டுள்ள விபரத்திற்கு அருகில் என்னுடைய சுருக்கொப்பம் இல்லை என்றா்ல் சரிதான். ExP 1 புகாரில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ExP 1 புகாரில் நான் பணத்தை திரும்ப பெற கோரி என்று பரிகாரம் கேட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ExP 1 புகாரில் எதிரிகள் நேர்மையற்ற முறையில் ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ExP 1 புகாரில் இணைப்பு என்ற இடத்தில் க்ளோரி எனக்கு வழங்கிய காசோலை நகல் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், இணைப்பு என்ற இடத்தில் காசோலை எண், வங்கி விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. 2 வது எதிரி க்ளோரி என்னிடம் கொடுத்ததாக சொன்ன காசோலை எண் எனக்கு

தெரியாது என்றால் சரியல்ல, 13, மற்றும் 14 ஆகும். நான் புகார் கொடுத்ததில் காலதாமதம் குறித்து போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் 01.04.2014 ம் தேதி எதிரிகள் எனது வீட்டிற்கு வந்து மிரட்டியதாக பொய்யாக புகார் கொடுத்துவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணாக பொய்யாக சாட்சியம் அளிப்பேன் என்றால் சரியல்ல. நான் கோழி பண்ணை நடத்தி வருகிறேன் என்று சொல்லியுள்ளதற்கு போலிசாரிடம் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரி Sri Ram சிப்பாண்டில்வேலை செய்கிறார் என்று சொல்லியுள்ளதை காட்டுவதற்கு நான் ஆவணம் எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லைஎன்றால் ஆவணம் கொடுக்கவில்லை ஆனால் எதிரிகள் அவ்வாறு சொல்லி தான் பணம் வாங்கினார்கள். 1ம் எதிரி நான் குடியிருக்கும் ஆய்க்குடி வீட்டில் வந்து ரூ 1,20,000 ரொக்கமாக வாங்கி சென்றார் என்று புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் புகார் உரிமையியல் சம்பந்தப்பட்டது என்றாலும், மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் இந்த எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ExP 1 புகாரில் சொல்லப்பட்ட சம்பவங்களுக்கும் இந்த எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.